ந.க.எண். ஈ4/5251 /2011.
நாள்: 04.11.2019

மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம்,
கரூர்.

## பொது ஏலம் மூலம் அசையா சொத்துக்கள் ஏலம் விடுவது குறித்த அறிவிப்பு மற்றும் நிபந்தனைகள்

தமிழ்நாடு முதலீட்டாளர்கள் நலன் பாதுகாப்பு சட்டம் 1997 (தமிழ்நாடு சட்டம் 44/1997)–ன்படி உட்பிரிவு 3–ன் கீழ் அரசாணை பல்வகை எண்.1224, உள் (நீதிமன்றங்கள்–IIA) துறை, நாள்.27.10.2004–ன்படி இடைமுடக்கம் செய்யப்பட்ட தி/ள். தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணிக்கு சொந்தமான அசையா சொத்துக்களின் பேரில் சட்டப்பிரிவு 4 மற்றும் 7(6)–ன்படி மதுரை சிறப்பு நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.5/2011–ல் 28.08.2018–ம் தேதியன்று வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் மேற்படி கூட்டணிக்கு சொந்தமான அசையா சொத்துக்களை பொது ஏலத்தில் விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

## ஏலம் விட அனுமதியளிக்கப்பட்ட நிறுவனத்தின் விபரம் மற்றும் வழக்கின் விபரம்

| நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | அரசாணை எண் மற்றும் நாள் | மதுரை சிறப்பு நீதிமன்ற தீர்ப்பு எண் மற்றும் நாள் |
|---|---|---|
| தி/ள்.தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி, கிருஷ்ணராயபுரம் வட்டம், கரூர் மாவட்டம். | அரசாணை எண்.1224, உள் (நீதிமன்றங்கள்–IIA) துறை, நாள்.27.10.2004 | மாண்பமை மதுரை TNPID சிறப்பு நீதிமன்ற வழக்கு எண்.O.S.No.5/2011- in C.C.No.69/2008–ன் தீர்ப்புரை நாள்.28.08.2018 மற்றும் மாண்பமை மதுரை TNPID சிறப்பு நீதிமன்ற உத்தரவுகள் – in IA.No.38/2019 நாள்.30.09.2019 |

## ஏலம் விட வழக்கில் குறிப்பிடப்பட்ட சொத்து விபரம்

| S. No. | Name and address of the owner of the property | Location of the property | Document Number and S.F.No | Extent of Land |
|---|---|---|---|---|
| 1. | Tamilnadu Elementary School Teachers Federation. Krishnarayapuram Taluk. Karur District. | Karur District. Krishnarayapuram Taluk. Krishnarayapuram North Village. Master Thirumanamandapam. | Document No.792/1996 S.F.No 74/67 | 674 Sq.M with Building |

மேற்படி நிறுவனத்தின் அசையா சொத்துக்கள் தகுதி பெற்ற அலுவலர் மற்றும் கரூர் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால் எதிர்வரும் 22.11.2019-ம் தேதி பிற்பகல் 04.00 மணியளவில் கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளது. ஏல நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஏலத்தில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் அனைவரும் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாக உரிய வைப்பீட்டுத் தொகையை "Competent Authority/District Revenue Officer. Karur" என்ற பதவி பெயரில் கேட்பு வரைவாக (Demand Draft) செலுத்தி, பொது ஏலத்தில் கலந்து கொள்ளலாம் எனவும், ஏலம் விடப்படவுள்ள மாஸ்டர் திருமண மண்டபத்தினை ஏல தேதிக்கு முன்னதாக பார்வையிடலாம் எனவும் தகுதி பெற்ற அலுவலர்/மாவட்ட வருவாய் அலுவலர், கரூர் அறிவிக்கின்றார்.

தகுதி பெற்ற அலுவலர் மற்றும்
மாவட்ட வருவாய் அலுவலர்,
கரூர்.

04/11/2019

ஏல நிபந்தனைகள்

| | |
|---|---|
| 1. | விண்ணப்பத்தில் ஏலம் கோர இருக்கும் சொத்தின் விபரம், கேட்பு வரைவோலை விபரம், ஏலதாரரது முழு முகவரி மற்றும் புகைப்படம் ஆகியவை இடம் பெற்றிருக்க வேண்டும். |
| 2. | ஏலத்தில் கலந்து கொள்ள விரும்புவோர் திரும்பத் தரக்கூடிய பிணை வைப்புத்தொகையாக ரூ.25,000/- க்கான கேட்பு வரைவோலையினை (Demand Draft) ஏதேனும் ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் தகுதி பெற்ற அலுவலர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர், கரூர் அவர்கள் பதவியின் பெயரில் பெற்று ஆஜர் படுத்த வேண்டும். |
| 3. | ஏலம் கேட்பதற்கு குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகவே ஏலம் நடத்தும் இடத்திற்கு வந்து கேட்பு வரைவோலையை அலுவலர்களின் பார்வைக்கு கொடுக்க வேண்டும். |
| 4. | ஏலம் மூலம் கோரப்பட்ட உயர்ந்த பட்ச விற்பனைத் தொகையைக் கோரிய ஏலதாரர் ஏலத் தொகையில் 25% தொகையை தேசிய மயமாக்கப்பட்ட வங்கியின் வரைவோலையாக உடன் ஏலம் நடத்தும் அலுவலரிடம் செலுத்திட வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறினால், அவரது கேட்பு ரத்து செய்யப்படுவதுடன் அவர் செலுத்தியுள்ள பிணை வைப்புத் தொகை திரும்ப வழங்கப்படமாட்டாது. |
| 5. | இந்த அரசிதழில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தினை கிரையம் பெற அதிக பட்ச ஏலம் கோரி விதிகளின்படி 25% விற்பனைத் தொகையை செலுத்திய நபர் மேற்படி சொத்தின் நிலமதிப்பின் மீதமுள்ள 75%-தை ஏலம் நடந்த நாளிலிருந்து 7 தினங்களுக்குள் செலுத்திட வேண்டும். குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முழுத் தொகையையும் செலுத்தத் தவறினால் குறிப்பிட்ட நபர் ஏற்கனவே செலுத்தியுள்ள தொகைகள் முழுவதும் அரசுக்கு பறிமுதல் செய்யப்படுவதுடன், விதிகளின்படி அடுத்தபடியாக அதிகத் தொகை ஏலம் கேட்ட நபருக்கு வாய்ப்பளிக்கப்படுவது தொடர்பாக மாவட்ட வருவாய் அலுவலரின் முடிவே இறுதியானது. |
| 6. | ஏலத்தில் விடப்படும் அசையாச் சொத்து அன்றைய தினம் உள்ள நிலையிலேயே விற்பனை செய்யப்படும். ஏலம் கோரும் முன் சம்பந்தப்பட்ட சொத்தினை நேரில் பார்வையிட்டு, பாதை வசதி, விஸ்தீரணம், கட்டிட மதிப்பு மற்றும் இதர விபரங்களை ஆராய்ந்து கொள்ள அனைவருக்கும் உரிமை உண்டு. பின்னால் இது தொடர்பான எந்த ஒரு பின் நிகழ்வுக்கும் அரசு பொறுப்பல்ல. |
| 7. | ஏல அறிவிக்கை பிரசுரிக்கப்பட்ட பின்னரோ அல்லது விற்பனை உறுதி ஆணை பிறப்பிப்பதற்கு முன்னரோ நிபந்தனைகளை மாற்றவோ அல்லது ரத்து செய்யவோ தகுதி பெற்ற அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு. அதற்கு நஷ்ட ஈடு கோர மனுதாரர்களுக்கு உரிமையில்லை. |
| 8. | உறுதி செய்யப்பட்ட விற்பனையை சம்பந்தப்பட்ட உயர் அலுவலர்கள் பொது நன்மையை கருதி ரத்து செய்ய நேரிட்டால் அதனால் ஏற்படும் இழப்புக்கு ஈடு கோர மனுதாரருக்கு உரிமையில்லை. |
| 9. | அறிவிப்பில் உள்ள சொத்துக்களின் பேரில் நீதிமன்றத்தில் ஆணை / தடையாணை பெறப்பட்டால் சம்பந்தப்பட்ட சொத்தினை விற்பனை செய்வது குறித்து தகுதி பெற்ற அலுவலர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலரால் எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும். |
| 10. | சொத்தினை வாங்கியவருக்கு எந்த காரணத்தினை முன்னிட்டும் இழப்பு ஏற்பட்டால் நஷ்ட ஈடு வழங்க இயலாது. |
| 11 | சொத்து தொடர்பான மேல் விபரங்களை அலுவலக வேலை நாட்களில் மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலகத்தில் நேரில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். |

| | |
|---|---|
| 12 | ஏலதாரர் உள்ளாட்சி துறைக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை முழுவதையும் செலுத்தி நேர் செய்து கொள்ள வேண்டும். |
| 13. | பதினெட்டு வயதிற்குட்பட்டோர் ஏலத்தில் கலந்து கொள்ள முடியாது. ஏலம் நடத்தும் அலுவலர் எந்த ஒரு குறிப்பட்ட நபருக்கும் ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதி மறுக்கலாம். எவ்வித காரணமும் அறிவிக்காமல் ஏலம் நடத்தும் இடத்திலேயே எந்த ஒரு குறிப்பிட்ட நபரையும் வெளியேற்றுவதற்கு ஏலம் நடத்தும் அலுவலருக்கு பூரண அதிகாரம் உண்டு. |
| 14. | ஏலத்திற்கு விலை கோருபவர்கள் ரூ.50,000/-க்கு (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) குறைத்து ஏலத்தொகையை அதிகப்படுத்த அனுமதிக்கப்பட மாட்டார்கள். |
| 15. | ஏலம் நடத்துகிற இடத்திற்கும் வெளியே இருந்து கேட்கும் கேள்விகளும் ஏலம் முடித்த பின்பு வரும் கோரிக்கைகளும் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஒவ்வொரு ஏலதாரரும் தனிப்பட்ட முறையில் ஏலம் கோரவேண்டும். ஏலதாரர்கள் கூட்டாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் இணைந்தோ ஏலம் கேட்டால் அத்தகைய கோரிக்கை அனுமதிக்கப்படமாட்டாது. |
| 16. | ஏலம் ஆரம்பமாகும்போது இந்த ஏல விளம்பரத்தில் கண்ட நிபந்தனைகள் மற்றும் ஏலம் நடத்தும் அலுவலரால் அறிவிக்கப்படுகின்ற சிறப்பு நிபந்தனைகள் ஆகியவை வாசித்துக் காண்பிக்கப்படும். ஒவ்வொரு ஏலதாரரும் அந்த நிபந்தனைகளை வாசித்து அறிந்து கொண்டதை ஒப்புக் கொள்ளும் வகையில் ஏல விளம்பரத்தின் நகலில் கையொப்பம் இடவேண்டும். |
| 17. | உயர்ந்த ஏலதாரர் அப்போதைய நிலவரப்படி வருமான வரி மற்றும் பத்திரக் கட்டணத் தொகை செலுத்தி பத்திரம் பதிவு செய்து கொள்ள வேண்டும். |
| 18. | ஏலம் உறுதி செய்யப்பட்ட பின்னர் சம்பந்தப்பட்ட ஏலக் கோரிக்கையை உயர்ந்த ஏலதாரர் திரும்பப் பெற்றுக் கொள்ள இயலாது. |
| 19. | தபால் மூலமாவோ, அல்லது தந்தி மூலமாகவோ கோரப்படும் ஏலக் கோரிக்கைகள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. |

தகுதி பெற்ற அலுவலர் மற்றும்
மாவட்ட வருவாய் அலுவலர்,
கரூர்.

04.11.2019